Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றுங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: பிரமாதி௵ ஆனி௴ சஉ (18-6-39) { இல. 33

சமயக் கல்வியின் அவசியம்

உலகம் மிகவுங் கிழ் நிலையை அடைந்து விட்டது. எங்குபார்த்தாலும் போர்க்கோலம். சண்டை எப்போது உலகத்தை வருத்தப்போகிறது என்ற பயம் எங்கும் யாவரிடத்திலும் குடிகொண்டுவிட்டது. இவ்வளவு அலங்கோல நிலை ஏற்படுவதற்குக் காரணம் யாது. தற்போது உலகத்திலுள்ளவர்கள் கற்ற பயனில் கல்வியே சகல சங்கடங்களுக்கும் காரணம். உலகத்தைத் திருத்தவேண்டுமாயின் கல்விமுறையைத் திருத்தவேண்டும்.

சில காலமாகச் சமயக்கல்வி கல்வியாளர்களால் முக்கியமாகக் கருதப்படாததுமன்றி கற்பிக்கப்படாமலும் விடப்பட்டது. இது காரணமாகப் பிள்ளைகள் கடவுள் பக்தியில்லாமல் மிருகங்களுக்கொப்பான சீவியத்தை நடாத்தி வந்தனர். அவர்களுக்குப் புண்ணியம் யாது, பாவம் யாது? எதுசரி, எது பிழை என்பன ஒன்றுமே தெரியாது. மனம்போன போக்கெல்லாம் போய் அநியாய வாழ்க்கையில் ஈடுபட்டனர். மாணவர்கள் அநேகமாக விடுதிகளில் இருந்து படித்து வருவதினல் அவர்கள் அங்கு தக்க சமயக்கல்வி பெறுவதில்லை. வீடுகளிற் பெறக்கூடிய அற்ப சமயப் பழக்கங்களையும் பெருது போகின்றனர். பிள்ளைகளுக்குத் தரும சாஸ்திரங்கள் சிறுவயசிற் கற்பிக்கவேண்டும். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, நன்னெறி, நாலடியார், திருக்குறள் போன்ற நூல்களை முறையாகப் பொருள் விளக்கமுறப் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டும்.

நமது வித்தியாசாலைகளில் சமயக் கல்வி திருப்திகரமாகப் படிப்பிக்கப்படுவதில்லை. படிப்பிப்பவர்களுக்கும் போதிய சமய சாஸ்திர அறிவு இல்லை. சமயசாஸ்திரம் படிப்பிக்கும் நேரம் மிகவும் அற்பமாகவிருக்கும். அந்நேரமும் சில காலங்களில் வேறு தேவைகளுக்கு உபயோகப்படுத்தப்படும்.

உலக சமாதானம் ஏற்படுவதற்குச் சமயக் கல்வி ஒவ்வொரு பிள்ளைக்கும் கற்பிக்க வேண்டும். சமயக் கல்வியன்றி வேறொரு கல்வியும் சமாதானத்தை ஏற்படுத்தமாட்டாது.

இந்திய ஆசிரியர்கள்

இலங்கையில் இப்போது 900 இந்தியர்கள் ஆசிரியர் உத்தியோகத்திலமர்ந்திருப்பதாக அறியக்கிடக்கிறது. இவர்களில் ஐந்துவருடத்துக்குள் வேலையிலமர்ந்தவர்கள் எத்தனைபேர் என்று கணக்கிட்டு அறிக்கை ஒன்று தயாரிக்கும்படி வித்தியாமந்திரி வித்தியாகர்த்தரைக் கேட்டிருக்கின்றார். இனிமேல் இந்தியர்களை ஆசிரியர்களாகப் பதியப்படாதென்ற விதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

காந்திஜியின் கல்வித் திட்டம்

தேநர் வித்துவான் S. உமைதாணுபிள்ளை

தற்காலப் படிப்பானது உத்தியோகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதற்காகப் பட்டங்களைப் பெறுவதாய் மக்கள் முனைந்து நிற்கின்றனர். பட்டங்களைப் பெறுவதற்காகப் பெருவாரியான பணத்தை வாரிக் கொட்டுகின்றார்கள். பட்டங்களைச் சுமந்துகொண்டு உத்தியோக வெறிபிடித்து துரைவாசல்கள் தோறும் அலைகின்றார்கள். தற்காலப் படிப்புப் பெரிய தனவந்தர்களுக்கே படிக்க முடியும். பாமரர்களுக்கு அப் படிப்பைப் பற்றி நினைக்கக்கூட வழியில்லை. அவர்கள் பெரிய பெரிய பட்டங்களைப் பெற்று பெரிய பெரிய உத்தியோகங்களில் இருக்கின்றனர். கையில் கொஞ்சம் பணம் உள்ளவர்களும் உத்தியோக வெறிகொண்டு கைக்காசைச் செலவு செய்து பல பட்டங்களைப் பெற்று வேலையின்றித் திண்டாடுகின்றனர். ஆண்டாண்டு தோறும் பட்டதாரிகள் வந்து குவிகின்றனர். வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டே வருகின்றது. பட்டதாரிகளின் நிலைமையெல்லாம் ஒருங்கே அறிந்த நமது கவிக்குயில்,

"பட்டம் பெற்றனன் பண்டிதர் தம்மிடம்
மட்டில் லாத மதிப்புரை விளங்கினன்
அட்டி லாது சுழன்று சுறங்குமிக்
கட்டம் நீங்கு வழியினும் கண்டிலேன்
வீடு விற்றும் விளைநிலம் விற்றும்மா
டாடு விற்றும் அணிமணி தாம் விற்றும்
பாடு பட்டுப் படித்த படிப்பெலாம்
வாடு மென்பசி மாற்றிய தில்லை."

என்று ஒரு பண்டிதன் பாடியதாய்ப் பாடி முழங்குகின்றது. இக் கவி தற்காலப் பட்டதாரிகளின் தன்மையை அப்படியே அனுபவித்துப் பாடுகின்றார்.

பிள்ளைகட்குப் பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டுமானால் அழுகையும், கண்ணீருந்தான். ஆனால் விளையாடப் போவதென்றால் இரட்டைச் சந்தோஷம் உண்டாகின்றது. தற்காலத்தில் பாடசாலைகளில் கற்பிக்கும் விஷயங்கள் பிள்ளைகளுக்குப் பிற்கால ஜீவியத்தில் ஒருவித நன்மையும் கொடுப்பதில்லை. விஷயங்கள் பிள்ளைகளின் மண்டையில் நுழைவதுமில்லை. விளையாட்டு மூலமாகப் பிள்ளைகளுக்கு அறிவை விருத்திசெய்ய வேண்டும்.

ஆசிரியர்கள் அவர்கள் படித்த படிப்பைக்கொண்டு பெரிதும் பெருமைகொள்ளுகின்றனர். அதற்குமேல் கற்பதைவிட்டு விடுகின்றனர். படித்த படிப்பைக்கொண்டு கிராமபோன் றிக்கார்ட்டுகள் மாதிரி மாறி மாறி கற்பிக்கின்றார்கள். இந்தப் பழங்கறியான விஷயங்கள் வளர்ச்சியுள்ள மழலைகளின் மண்டையில் எவ்வாறு நுழையும்? ஆசிரியர்கள் பாடங்களைக் கற்பிக்கும் காலங்களில் ஓர் நண்பன் போலவே பிள்ளைகளிடம் நடந்துகொள்ளவேண்டும். ஓர் கூற்றுவகை ஆசிரியர் இருந்துவிடக் கூடாது. சில ஆசிரியர்களுக்கு எப்பொழுதும் மழலைகளிடம் சீற்றந்தான். கையில் பிரம்பு இருக்கின்ற ஆசிரியர்களுக்கு வகுப்பை நடத்த முடியாது.

ஆசிரியரின் அடிக்குப் பயந்தும், பெற்றோர்களது ஏச்சிற்கும், அடிக்கும் மிக மிகப் பயந்தும் மழலைகள் பாடசாலையில் கொடிய சிறைத்தண்டனையை அனுபவித்து வருகின்றனர். இம்முறையானது ஓங்கிவளரும் இளம் மூளையை நள்ளி வளர்ச்சியைக் கெடுப்பதுவேயாகும். இளமையே வளர்ச்சிக்குரிய ஏற்ற காலம். இக்காலங்களில் மனதை அடிமைப்படுத்தினால் அறிவு எவ்வாறு ஓங்கி வளரமுடியும். இப்பாடசாலைகள் பிள்ளைகளின் மழலைப் பருவத்தை மறைத்துவைத்து மாசுபடுத்தும் ஓர் சிறைச்சாலையே ஆகும். இக்கொடிய சிறைச்சாலையிலிருந்து மழலைகளை விடுதலை செய்யவே காந்திஜீ ஓர் அரிய பெரிய புதிய கல்வித்திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்.

பிற்கால ஜீவியத்திற்கு ஒரு சிறிதும் பயன்படாத விஷயங்களை மழலைகள் மண்டையில் திணிப்பதுவே தற்காலப் படிப்பின் முறைமையாகும். ஒரு பையில் அளவுக்கு மிஞ்சிப் பொருள்களைச் செலுத்தினால் பையும் கிழிவிடுவதன்றி, அதன் பாரத்தை ஒருவராலும் தாங்கிச்செல்ல முடியாது. இப்பொழுதுள்ள படிப்பு ஓர் பெரிய பழுவுள்ளதாகவே காணப்படுகிறது. படிப்பானது ஒருவனுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு ஒரு பழக்கத்தைக் கற்பிப்பதாகவே இருக்கவேண்டும். ஒருவனுடைய ஜீவியத்தைத் தடுப்பதற்குள்ள ஒரு பெரிய பாரமாகிவிடக்கூடாது. படிப்பானது ஒருவனுடைய வாழ்க்கையைத் தடுக்கும் ஓர் பெரிய பாரமாகிப்போய்விட்டால், உலகத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகப்படுவதியற்கை.

உண்மையாகப் படித்தவனுக்கு, சிபார்சுகள் செய்து ஒருவரும் வேலை வாங்கிக் கொடுக்கவேண்டியதில்லை. தன் வாழ்க்கையை நடத்துவதற்குப் பிறர் கையை எதிர்பார்ப்பவன் படித்தவனாவானா? எழுத்து வாசனை அறியாதவர்களும் ஒவ்வொரு தொழிலில் ஈடுபட்டு, அவரவர் வாழ்க்கையைத் திறம்பட நடத்துகின்றனர். கைத்தொழிலே மெய்த்தொழிலாகும். கைகூப்பும் சேவகம் ஓர் பொய்த் தொழிலேயாகும். பட்டதாரிகளுக்கு ஒரு கைத்தொழிலும் தெரியாது. மூதாதைகள் சேமித்து வைத்த பணத்தை நிழலில் இருந்துகொண்டு அழிக்க மட்டுந்தான் அவர்கள் படித்த படிப்பிலிருந்து கற்றுக்கொண்டார்கள்போலும். இத்துடன் வேலைக்காகத் துரைகளின் வாசல்கள்தோறும் அலைந்து திரியவும் தெரியும். இவர்கள் உத்தியோக வெறியை விட்டுவிட்டு உழவுக்ும் தொழிலுக்கும் வந்தனை செய்வாராக. நெஞ்சின் நாலை நினைப்பதை விட்டுவிட்டு பஞ்சின் நாலிற் பழகத் துணிவார்களாக.

நம் நாட்டிலுள்ள தற்காலக் கல்வி முறையை இந்தியாவிலுள்ள பேரறிஞர்கள் பலரும் பெரிதும் கண்டிக்கின்றனர். தேசிய வாழ்க்கைக்குப் புத்துயிரளிக்கும் முறையில் கல்வித் திட்டத்தை அமைப்பது மிகவும் இன்றியமையாததாகும். இப்படித் தங்களின் ஊழல்களை

சஞ்சிதமே யாதி சரக்கான முச்சேறும், வெந்தபொரி யாகஅருள் மேவுநாள் எந்நாளோ.

யெல்லாம் அகற்றுவதற்காக மகாத்மாஜீ ஓர் புதிய கல்வித் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார். அதற்கு வார்தா கல்வித் திட்டம் என்றுபெயர். வடஇந்தியாவில் பல இடங்களிலும் இத்திட்டம் நடப்புக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கு வேண்டிய பயிற்சியும் வருடந்தோறும் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது.

பிள்ளைகளுக்குப் பதினன்கு ஆண்டு நிரம்புவதற்குள் எழுத்தறிவு போதிக்கப்படவேண்டும். அத்துடன் அவர்கள் ஜீவியத்திற்காக வேலைசெய்து பிழைக்கும் ஓர் சக்தியையும் அடையச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். நம்நாட்டில் எழுத்து வாசனை அறியாதார் தொகையே மிகுதியாக உள்ளது. அவர்களுக்குக் கட்டாயப் படிப்பு மிகவும் இன்றியமையாததாகும். அப் படிப்பும் இலவசமாகவே அளிக்கப்படல் வேண்டும். இந்தியாவெங்கும் இம்முறையைக் கையாளுதல் எளிதன்று. இதனை நன்கறிந்த காந்திஜி நன்கு பரிசீலனை செய்தே இப்புதிய திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்.

பாடசாலைகளில் கற்பிக்கும் கல்வி இலாபகரமானதாகவே இருக்கவேண்டும். அறிவைப் பெருக்குவதற்காகக் கற்பிக்கும் கல்வியானது, பொருளை உற்பத்தி செய்யும் ஒரு கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும். பொதுவாகப் பணம் சம்பாதிப்பதுவே இக்கல்வித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அறிவைப் பெருக்குவதற்காகக் கற்பிக்கும் ஒவ்வொரு விஷயமும் ஒவ்வொரு தொழிலுடன் சம்பந்தம் உடையதாக இருக்கவேண்டும். மழலைகளுக்கு அறிவைப் பெருக்கவேண்டும். அத்துடன் தொழிலில் நல்ல அநுபவப் பயிற்சியும் அளிக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

கல்வியானது உண்மையான கொள்கையின்படி கற்பிக்கப்பட வேண்டும். அதற்கு வேண்டியசெலவு, பொருள் உற்பத்தி செய்யும் ஓர் தொழிலிலிருந்து கொடுக்கவேண்டும். ஒரு தொழில் திறமையாகவும், ஏராளமாகவும் செய்யப்பட்டால், கற்பிப்பதற்கு வேண்டிய செலவு அத் தொழிலிலிருந்து உறுதியாகக் கிடைக்கும் என்பது காந்திஜியின் கருத்து. தொழில்பயிற்சி வேறு, கல்விப்பயிற்சி வேறு என்ற வேறுபாட்டை ஒழிப்பதுவே வார்தாத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். எதிர்கால வாழ்க்கையில் நம் நாட்டிற்கு வேண்டிய கல்வித் திட்டங்களைப்பற்றி காந்திஜி வார்தா திட்டத்தால் அரிய பெரிய விஷயங்களை நுட்பமாக ஆராய்ந்து நம் நாட்டிற்கு உதவியிருக்கிறார். அத்திட்டத்தை நம் நாடெங்கும் நடைமுறையில் கொண்டுவர முயலவேண்டும். நாடெங்கும் இப்புதியதிட்டம் நடைமுறையில் வரும்பொழுது காந்திஜியின் பெருமை இன்னும் அதிகமாக விளங்கும் என்பது திண்ணம்.

"நெஞ்சின் நூலை கிளைப்பது விட்டினிப்
பஞ்சின் நூலிற் பழகத் துணிகுவோமேல்
கெஞ்சும் வாழ்க்கையும் கேடும் ஒழியுமே
விஞ்சு செல்வமும் மேன்மையும் தங்குமே"

என்னும் தேசியின் வாக்குப் பொய்க்குமா? ஓ! ஓ! ஒருநாளும் பொய்யாகாது. தேசிய வாழ்க்கையில் புத்துயிர் பெற்று நம் பாரதநாடு விடுதலையடைய காந்திஜியின் வார்தா கல்வித்திட்டமானது நமக்குக் கிடைத்தற்கரிய பெரிய நிதியே ஆகும்.

பாவம்

"பாவம்" என்னும் சொற்கு விரிபொருள் கூறவேண்டுவதில்லை. அஃது ஆதியா அநாதியா என்னும் ஆராய்ச்சியும் கூறவேண்டியதன்று. பாவவினை இஃதென்று ஒவ்வொருவருக்குந் தெரியும். மனச்சான்றெனுந் தெய்வ உணர்வுக்கு மாறுபட்டு நிகழ்த்தப்படும் வினையைப் பாவம் என்று சுருங்கக்கூறலாம்.

"பாவம் என்பது மனிதப் பிறப்புக்குத்தானா உண்டு? ஏனைய விலங்கு, பறவை முதலிய அஃறிணை உயிர்கட்கில்லையா?" என்னும் வினா சில இடங்களினின்றும் எழலாம். மனிதன் பாவவினை ஆற்றும்போது: 'அதைச் செய்யாதே' என்று அவன் மாட்டுள்ள ஓர் அறிவு தடைசெய்கின்றது. அவ்வறிவு விளக்கம் விலங்கு முதலிய உயிர்கட்கில்லை என்பது வெள்ளிடைமலை. ஆதலால், விலக்கு முதலிய உயிர்களைப்பற்றி ஈண்டு ஆராயவேண்டுவதில்லை. மனிதனைப்பற்றியே சிந்தித்தல் வேண்டும்.

'பாவஞ் செய்யாதே' என்று மனிதனை விழித்தே ஆன்றோர் தாம் அருளிய தெய்வ நூல்களிற் கூறினர். எந்நூல் கூறினும், எவர் அறிவுறுத்தினும், எவ்வறிவு தடுப்பினும் மனிதன் பாவஞ்செய்யா திருக்கிறானா? மனிதன் பாவஞ்செய்துகொண்டே யிருக்கிறான். பாவச் செயல்களில் ஒருவனுக்கும் மற்றொருவனுக்கும் வேற்றுமை யிருக்கலாம். ஒருவன் ஒருவித பாவஞ் செய்கிறான். மற்றொருவன் மற்றொருவித பாவஞ் செய்கிறான். பாவத்தினின்றும் நீங்கிய மனிதன் இருக்கிறானா என்பதும், அதனின்றும் பிழைத்து வாழ்கின்றானா என்பதும் ஆராயற்பாலன.

பண்டைநாளில் மனிதன் அரசாங்கங் கோலினான். எந்நோக்குடன் அவன் அதைக் கோலினான்? உலகில் பாவச் செயல்களைத் தடுத்துப் புண்ணியச் செயல்களைப் பெருக்கற்கென்றே மனிதன் அரசாங்கத்தைக் கோலினான். நாளடைவில் அந்நோக்கம் சிதையலாயிற்று. அரசாங்கம் பாவிகளால் நடாத்தப்படுமானால் உலகிற் பாவமே தாண்டவம்புரியும்.

மனிதனைப் பாவத்தினின்றும் பிழைப்பிக்க இயற்கைச் சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. "கொலை செய்யாதே; கள்வாடாதே; கள்ளுண்ணாதே; பிறர் மனை விழையாதே; பொய் பேசாதே" இவ்வைந்தில் அச்சட்டங்கள் எல்லாம் அமைந்திருக்கின்றன. இவ்வைந்தறங்களையும் முறையே நிகழ்த்தி வருவோன்பால் பாவம் அணுகாது.

(தொடர்ச்சி 262-ம் பக்கம் பார்க்க)

தேகமுதல் நான்காத் திரண்டொன்றாய் நின்றிலகும், மோகமிகு மாயை முடியுநாள் எந்நாளோ.

கல்வி - 42

(தமிழாசிரியர் திரு. கா. இளையதம்பி அவர்கள்.)

கல்வியென்று நாமுமெழுதுகிறோம். *நீங்களுங் கல்வியென்று தினந்தோறும் படிக்கிறீர்கள். "கல்வி கரையில" என்றதனால் அதற்கு முடிவு காண்டலும் அரிதேயாம். மேலைத் தேயத்தவர் கல்வி பரப்பும் நிலைய மாய்த் தந்தேயமிருந்து வருகிறதென்றும், தாமே தேயந் தோறுங் கல்வியைக் கொண்டு செல்கின்றோமென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். தாம் பரப்புங் கல்வி காரண மாகவே தேசங்களும் சாதிகளும் சீர்திருத்தத்தைக் கண்டடைந்து நாகரிகத்தின் படிகளிலேறி யிக்காலத்து நாங்காணும் நிலைக்கு வந்தனவெனக் கூறுகின்றனர்; இக்கூற்றுக் கனுபவசாட்சிய முண்டோவென விசாரிப் பது காலச் சிறந்ததென்று கொள்ளுதல் மிகையாகாது. ஸ்பானியாவிலே சென்ற சில வருடங்களாக நடைபெற்ற வுரிமைக் கலகத்தை நோக்குக. ஜேர்மனிய இற்றாலிய படைகள் வலியச் சென்று அங்குச் செய்த நிஷ்டூரங் களைச் சிந்திக்க. ஸ்பானிய சனங்கள்பட்ட பாட்டை நோக்குக. அமெரிக்காவிலும் பிறவிடங்களிலும் கொள் ளைக் கூட்டத்தினர் பொருள் சேர்க்கும்பொருட்டுச் செய்துகொண்டுவரும் பரிதபிக்கப்படத்தக்க செய்திகளை நாம் கேட்டிருக்கின்றோமே. ஆகாய விமானங்கள் உல குக்கு விளக்கு மின்னல்க ளெத்திறத்தன? பாலரென் றும், விருத்தரென்றும், பெண்களென்றும், நோயாள ரென்றும், தம்பாட்டி விருப்பவர்களென்றும் பார்க்குங் கண் விமானஞ் செலுத்தும் யுத்தப்பிரியர்க் கில்லையாமே. குறித்த செருக்களத்தில் மாத்திரம் படைதிரட்டி யமர் பொருது பொன்றுதலும் வென்றியடைதலு மிக்காலத்து விமானப் போருக்கில்லையாமே! காந்தியடிகள் கூறும் அஹிம்சா தருமமும், சாத்வீகமும் எங்கே? இஃதெல் லாம் கல்வியென்றும், கல்வியின் பேறு என்றும் சாற் றுத்லெங்ஙனம்? சாஸ்திரக்கலை விருத்தியின் பயனென்று கொள்ளுதற்கு மிடமில்லையே.

எம்முன்னோர் "கல்வியினூங்கில்லைச் சிற்றுயிர்க் குற்ற துணை" யென்றும், அது புருஷார்த்தங்கள் நான் கையும் தருமென்றுஞ் சொல்லிப்போயினர். அம்மட்டோ! தாமுமவ்வழியே சென்று வீடடைந்தனரெனின் அது பிழையாகுமோ? இந்தியருடைய கல்வி இப்படியென்று மற்றையோருங் கூறினரன்றோ! கற்றலின் வாய்த்த பிற வில்லையென்று கண்ட எம்மனோரின் கல்விக்கும், ஏனை யோரின் கல்விக்கும் பேதமுண்டென்க. ஆதலின் கல்வி யென்பதியாது என்று மாணாக்கனே வினவுக. மறங் கெடுத்து அறன் நாட்டுவது கல்வியென்றும், அறத்தின் வழிநின்று பொருள் சம்பாதிப்பது கல்வியென்றும், "பொருளில்லார்க் கிவ்வுலக மில்லாகியாங்கு" என்ற படி பொருளின் இவ்வுலக வின்பந்துய்ப்பது கல்வி யென்றும், நித்திய பேரின்பமடையும் பொருட்டு இம் மூன்றையும் விட்டதே கல்வியென்றும் கூறுப. இக் காலத்தவராகிய பிறர் இதற்கு மாறாக அறத்தைக் கெடுப் பதும், மறத்தை நாட்டுவதும், பிறர்க்கு இன்னல் விளைப் பதும், அவரை யடிமைப்படுத்துவதும், மறத்தின்வழி நின்று பொருளீட்டுவதும், அதனைத் தாமே தமியராய்த் துய்த்தலும், இறைவனொருவ னுண்டோவெனச் சந்தே கித்தலுங் கல்வியாமெனக் கூறுகின்றார்.

ஆசிரியன் தான் கற்பிக்குங் கல்வி யெத்தகைய தென்று சிந்திக்க மாணாக்கனும் ஆசிரியன்வழி நின்று தான் கற்குங் கல்விநல னெப்படிப்பட்டதென் றாராய்க. கல்வியே எல்லா நன்மைக்கும், எல்லாத் தீமைக்குங் காரணமெனப் புறத்தே நிற்கும் அறிவிலி கூறுகின் றானே. கற்றறிமூடரும், கல்வியாற்றாமைச் சீர்கெடுத் தாரும், கல்வியால் நிரீச்சுரவாதியானாரும், கல்வியாலுல கத்துக்குச் சுமையானாரும் பிறருமிருக்கிறார்களே. ஆத லிற் கல்வியென்பதியாது என்றும், அதனிலக்கு யாது என்றும் பின்னுஞ் சிந்திக்கவேண்டியது கடனும்.

* சத்த முதலாத் தறைந்திங் கெமக்குணர்த்துஞ், சுத்தமா மாயை தொடக்கறுவ தெந்நாளோ.

யாரது இலட்சுமியார்?

பொன்னாலை, கா. குமாரசாமி

கொழும்பைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் எனக்கு நெடுநாளாக இருந்து வந்தது. கொழும்புக்குப் போய் வந்தவர்களெல்லாம் அங்குள்ள வினோத விசித் திரங்களைப்பற்றிக் கூறும்போது என்மனமும், "இப் போதே அங்குபோய் நின்றாலோ" என்று அங்கலாய்க் கும். இருந்தாற்போலிருந்து என் நண்பனொருவனும் கொழும்பிற்குப் போவதாகக் கேள்விப்படவே உடனே நானும் புறப்பட்டுவிட்டேன்.

யாழ்ப்பாணம் ஸ்டேசனில் நானும் நண்பனும் ரயில் ஏறினோம். நாங்கள் ஏறிக்கொண்டது ஐந்துமணி ரயிலாதலின் சில ஸ்டேசன்களை நாம் கடக்குமுன்னமே பொழுது இருட்டிவிட்டது. பொழுதும் போகப் போக எனக்கும் நித்திராதேவியின் அருள் கிடைக்கும்போ லிருந்தது. (நான் கொஞ்சம் நித்திரைப்பிரியன்.) ஒரு விதமாக — நண்பனின் வேண்டுதலின்படி — மதவாச்சி வரையும் கண்ணை விழித்தபடியே தூங்கிக்கொண்டிருந் தேன். ஆனால் அதற்குமேல் என்னால் பொறுக்கவே முடியவில்லை. அப்படியே என்னை நித்திராதேவி ஆட் கொண்டுவிட்டாள்.

* * *

நாங்கள் கொழும்பை அடைந்தபோது ஒரு பெரிய அதிசயம் நிகழ்ந்தது. ஆகாயத்திலிருந்து பல துண்டுப் பிரசுரங்கள் பறந்துவந்து நகரம் எங்கணும் விழுந்தன. எமக்கும் அப்பிரசுரம் கிடைக்கவேதான் செய்தது. அதில் எழுதியிருந்ததைப் பார்த்ததும், "ஆ" என்று பிரமித்துப்போய்விட்டேன் நான். அதன் சாரத்தைக் கேளுங்கள்.

“தேவை, ஸ்ரீ வைகுண்டத்தில் சர்வாதிகாரியாய்த் திகழ்ந்த ஸ்ரீ நாராயணமூர்த்தி அவர்கள், (விஷ்ணு) தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டபடியால், அந்த இடத்திற்கு ஓர் ஆள் தேவை. யாவரும் விண்ணப்பம் செய்யலாம். அவரவர் அதிஷ்டத்தையே பொறுத்தது.”

இந்த விளம்பரத்தைப் பார்த்ததும் எனக்கு ஒரு திடீர் யோசனை தோன்றிற்று. “ஏன் நாமும் ஒரு விண்ணப்பம் போட்டுப் பார்த்தாலென்ன?” என்பது தான் அந்த யோசனை. உடனேயே அதை எழுதியும் போட்டுவிட்டேன். ஒருவேளை எனக்கு ஏன் அதிஷ்டம் இருக்கக்கூடாது? மகாவிஷ்ணுவின் பதவி என்றால் சாமான்யமானதா?

ஏதோ நல்ல காலம், அதிஷ்டகாலம் அந்த மகா விஷ்ணுவின் பதவி எனக்குத்தான் கிடைத்தது. நானடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. குறித்த தினம் வந்தது. எப்படிப் போனேனென்று தெரியாமல் வைகுண்டத்திலிருந்தேன். எனது தேகத்தை மகாவிஷ்ணுவுக்குரிய ஆபரணங்களும், ஆடைகளும் அலங்கரித்துக் கொண்டிருந்தன. என்றால் எனக்குவந்த ஆனந்தத்தைத் தாங்கமுடியவில்லை. துள்ளிக்குதித்துப் பலமாக ஒரு முறை கைதட்டினேன்.

பாம்பாசனம், இவை எல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. எனக்காகப் பாற்கடலின் மத்தியில் ஓர் அலங்கார மண்டபம் அமைத்திருந்தார்கள். ஆகா! அதன் அழகுதான் என்னே!

இராக்காலம் வந்தது. எனக்கு நெடுநாளாக ஒரு ஆசை இலக்குமியைப் பார்க்கவேண்டுமென்று. புலவர்களெல்லாம் அழகுத் தெய்வமென்று வர்ணிக்கிறார்களே! அவள் எப்படித்தானிருப்பாளோ? என்று ஏங்கியிருந்தேன். இதே சமயத்தில் இலட்சுமி என்னருகில் வந்தாள். திரும்பி அவளை உற்று நோக்கினேன். ஐயோ! இவளா இலக்குமி? சுத்தப் பட்டிக்காட்டல்லவா? தற்காலப் பெண்களின் “கௌன்” எங்கே? இவளுடைய பதினெட்டு முழப் பட்டுப்புடவை எங்கே? அப்படிப் புடவை உடுத்திக்கொண்டாலும் பன்னிரண்டு முழத்திற்கு மேலையா? சீ!

அப்பாடா! கழுத்து முறியமுறிய இத்தனை நகைகள் போடவேண்டுமா? ஒரு சங்கிலி இருந்தால் போதாதா?

இந்தத் தலைப் பின்னலைப் பார்த்தாலே எல்லாம் விளங்கிவிடும். ஐயோ! இந்தப் பின்னலுக்கும், தற்காலப் பின்னல்களுக்கும் எவ்வளவு வித்தியாசம். அப்புறம் நான் அவளைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

பொழுது விடிந்தது. எனது மாளிகைக்கு வெளியில் யாரோ அலறுவது கேட்டது. கொஞ்ச நேரத்தில் இந்திராதி தேவர்களனைவரும் பாடிக்கொண்டே என் முன் வந்தார்கள். அடடா அந்தப் பாட்டுக்கள்தான் எவ்வளவு கர்நாடகம்! இக்காலச் சிந்தாமணிப் பாட்டுகள் எங்கே? இவைகள் எங்கே?

“வந்த காரணம் என்ன?” என்றேன்.

“அரக்கர்களின் கொடுமை தாங்கமுடியவில்லை. நீங்கள்தான் அருள் புரியவேண்டும்” என்றார்கள் அவர்கள்.

“அடே அப்பா! நான் படும்பாடு உங்களுக்குத் தெரியவில்லை. உங்களுக்குத்தான் அவசரமோ?”

“உங்களுக்குக் குறையிருக்குமா தேவரீர்......”

“அதெல்லாமிருக்கட்டும், நாளைக்கே நீங்களும் அசுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடையவேண்டும். அதிலிருந்து தோன்றும் — நவ நாகரீக — இலட்சுமியை நான் விவாகம் செய்யவேண்டும்.”

“சரி, தங்கள் சித்தம்.”

* * * *

இரண்டு நாட்களின்பின் என்னிடம் பிரமன் வந்தான். “என்ன” என்றேன்.

“பாற்கடல் கடைந்தாய்விட்டது. இலட்சுமி வெளிப்பட்டுவிட்டாள். சீக்கிரம் உங்களை வந்தடைவாள்” என்றான் பணிவுடன்.

“சரி” என்று தலையாட்டினேன். அவன் போய் விட்டான். அதன்பின் நிலைக்கண்ணாடி முன்பு போய், என்னை ஒருதரம் அழகு பார்த்துக்கொண்டேன். நெற்றியிலிருந்த சந்தனப் பொட்டிற்குமேலே, ஒரு சிறிய குங்குமப் பொட்டும் இட்டுக்கொண்டேன்.

இலட்சுமி பின்புறமாக வருவது தெரிந்தது. உடனே நான் அவளைக் கவனியாதவன்போல் மறுபக்கம் திரும்பி இருந்துகொண்டேன். அதற்குள்ளே எனக்குப் பல யோசனைகள் தோன்றின. அவள் வந்து முதலில் என்ன செய்வாள்? என்னுடைய கண்களை வந்து தன் கைகளால் மூடுவாளாக்கும்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் யாரோ என் முதுகில் தட்டுவது தெரிந்தது. உடனே நான் ஒன்றுமறியாதவன்போல், “யாரது இலட்சுமியா?” என்றேன்.

கண்ணை விழித்தேன். “கொழும்பு வந்திட்டுதடா! இன்னுமா தூக்கம்?” என்று கூறிக்கொண்டே என் நண்பன் எனது முதுகில் தட்டிக்கொண்டிருந்தான்.

ஈழகேசரி கல்வி அனுபந்தம்
தனிப்பிரதி விலை சதம் — 3
25 பிரதிகள் விலை சதம் — 50
தபாற் செலவு வேறு
ஆண்டுச் சந்தா ரூபா 2.
முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது.

குட்டிக்கதை

"நீ விரும்பியதைக்கொடு"

"ச. மூ"

சீனியருக்கு ஏராளமான காணி பூமி. ஒரே ஒரு மகன். பெயர் சண்முகநாதன்; வயது பதினைந்து இருக்கலாம். தகப்பனைப் போலவல்ல. பரோபகாரி. பொருள் பறிக்கும் சிநேகர் பலர்.

சீனியருக்கு வயிற்றில் ஒரு குத்து. கடுமை நம்பிக்கைக்குறைவு. மகனைப்பற்றி நினைத்தார். செய்வது தெரியாது கலங்கினார். துற்சகவாசத்தால் கேடு நேருமெனத் தட்டியது அவர் மூளையில். சீனியரின் பிராண நண்பர் காய்ச்சுப்பர். தெரிந்தது தெரியாதது எல்லாவற்றிற்கும் 'ஆம் ஓம்' என்று தலையசைப்பார். கண்டொன்று காணுதொன்று சொல்லத் தெரியாது. ஆனால் பெரிய வஞ்சகன். நாரதர் என்றும் பட்டப்பெயருண்டு. தன் இறுதிகாலத்தை நினைத்ததும் சுப்பருடன் கலந்து பேசினார். சுப்பரும் மனது உடைந்தவர் போல் பாசாங்கு பண்ணிக் கண்ணீரும் துளித்துவிட்டார். சுப்பரின் நினைக்கொணுச் சிநேகபான்மையைக் கண்டும் அநுபவத்தைக் கொண்டும் தனக்குரியன யாவற்றையும் சுப்பர் பெயரில் எழுதிவைத்தார். மகனின் சீவிய வரும்படியைக் காட்டி "நீ விரும்பியதைக் கொடு" என வாசகத்தில் காட்டப்பட்டிருந்தது. சுப்பரை நம்பிப்போலும் சீனியர் இவ்வுலகை....

பத்துவருடங்கள் ஓடிமறைந்தன. சண்முகநாதன் மனைவி எட்டுமாசம். காலம்மாறினது. பணக்கஷ்டம். ஓடினான் சுப்பரிடம். அவர் "கண்டதார்; கேட்டதார்" என்று துள்ளியெழும்பினார். என்ன செய்வதென்று அவனுக்குப்புரியவில்லை. நாலு பெரிய மனுஷருக்குச் சொன்னான். "கலகம் பிறக்கின் நியாயம் பிறக்கும்" என்றனர். கோடேறி சுப்பருக்குக் கிடு நடுக்கம். உலகத்துக்கும் நீதிக்கும் பயந்து பார்க்கமேய்க்காமலிருந்த சொரியலை அவன் பெயரில் காட்டிவிட்டார். சண்முகநாதன் வேண்டாமென்று மறுத்துவிட்டான். நம்பிக்கைத்துரோகம் என்ற முறையில் வழக்கு வைத்தான்.

சுப்பர் 'சுற்றவாளி'யென்று நீதிபதிக்குக் கூறினார். சீனியர் எழுதிக்கொடுத்த வாசகத்தை நீதவான் பார்த்தார். 'நீ விரும்பியதைக் கொடு' என்று வாசகம் கூறுகிறது. சுப்பர்—விருப்பத்தின்படியே கொடுத்தது நீதி. அவர்மேற் 'குற்றமில்லை'யென்று புலப்பட்டது. ஆனால் தகப்பனின் பொருள் பண்டம்யாவும் மகனுக்குச்சேரவேண்டியது மனுநீதி. விரல்நகத்தைக் கடித்தவண்ணம் ஆழ்ந்துயோசித்தார். எங்கும் ஒரே நிசப்தம். கோட்டிலுள்ளோரும் வாஞ்சையுடன் கற்சிலைகள் போல் ஒரே பார்வையுடன் நீதவானின் வாயிலிருந்து என்ன வெளிப்படுமோஎன்று பொறுமையின்றியிருந்தனர். சுப்பருக்குக் குறுவேர்வை. அவர்மனம் பட்டபாடு அவருக்கேதெரியும்.

நீதவான் நெடிய பெருமூச்சுடன் நீதிமன்றத்தைக் குடிகொண்டிருந்த அமைதியைக்கலைத்தார். "சுப்பர் குற்றவாளியல்ல; வாசகம் சொல்வதுபோல் கொடுத்திருக்கிறார். என்ன செய்யலாம். அவர் கொடுத்தவையே உனக்குரியவை" என்று பரிதாபத்துடன் கூறினார். சுப்பர் தன்னை மறந்தார். சந்தோஷத்தின் எல்லைக்கு அளவில்லை. முனியப்பருக்கு ஆடு வெட்டுவதாகவும் நேர்ந்து கொண்டார். அதிக தூரம் மகிழ்ச்சியடையவிடாது, "ஆனால் ஒன்று, சுப்பரே! இன்னும் நீர் விரும்பியதைக் கொடுக்கவில்லை. சீக்கிரம் கொடுத்துவிடும். விருப்பமினத்தோடு சண்முகத்துக்குக் கொடுத்தவைகளை நீர் எடுத்துக்கொண்டு விரும்பியெடுத்தவைகளைச் சண்முகநாதனுக்குக் கொடுத்துவிடும்" என நீதவான் உத்தரவிட்டார்.

பாவம்

(259-ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதன் பாவத்திற் பிறந்து, பாவத்தில் வளர்வது கண்கூடு. பாவஞ் செய்வது தவறு என்பதை மனிதன் உணர்கிறான். உணர்ந்தும் அவன் அதைச் செய்யாமலிருக்கிறானா? இல்லையே! என் செய்வது! ஒருவன் பிறர்க்குப் போதிப்பதோடு, தன்பாலுள்ள குறையைக் களைய முயலல்வேண்டும். திருவருள் ஞானங் கைவரப்பெற்ற பெரியோரும் "குலம்பொல்லேன் குணம்பொல்லேன" என்று அருளிச் செய்திருப்பது உன்னத்தக்கது.

"குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தே னல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வேன் தோன்றினேன ஏழை யேனே."

பாவத்தை உணர்ந்து, திருவருள் நெறி நிற்போர் வழி அரசு நடைபெறின் உலகம் நன்னிலையெய்தும். அரசவமைப்பு மக்கள் நிலையைப் பொறுத்து நிற்கிறது. நன்மக்கள் வாழும் ஊரில் நல்லரசு நிலவுதலியல்பு.

மக்களுள்ளத்தில் அன்பு, இரக்கம், ஈகை முதலிய நறுங்குணங்கள் பெருகப் பெருகப் பாவ எழுச்சி தானே ஒடுங்கிப்போய்விடும். ஒருவன் தான் செய்யும் பாவங்குறித்து ஆண்டவனை நோக்கி அழுதால் ஆண்டவன் அருள் செய்யானா? பாவத்தை மன்னித்து அருள்புரிய ஆண்டவனிருக்கிறான். அஃதே அவன் வேலை. பாவத்தை ஆற்றிக்கொண்டு — (கடவுளை நோக்கி அழுதுகொண்டு) இருந்தால் பாவம் கழன்றுவிடுமா? என்று ஒருசிலர் கேட்கலாம். அறியாமையாற் செய்யும் பாவங்குறித்து வருந்தும் மனமுடையான், மீண்டும் அப்பாவஞ்செய்ய ஒருப்படான். பாவங்குறித்து வருந்தல் என்பதன் நுட்பத்தை உணர்வோர்க்கு எவ்வித ஐயமும் நிகழாது. பாவத்தை அழிக்கவல்லது கடவுள்நெறியொன்றே. கடவுள் முன்னிலையில் பாவத்தை வெளியிடும் ஆண்மைக்குணம் மக்கள் பெறவேண்டும்.

சி. அரசரத்தினம் (180),
S. S. C. மாணவன்
உடுவில் தெற்குச், சைவவித்தியாசாலை

நித்திரையாய் வந்து நினைவழிக்குங் கேவலமாஞ், சத்துருவை வெல்லுஞ் சமர்த்தறிவ தெந்நாளோ.

புத்திமான் பலவான்

V. C.

நாலந்தை ஓர் தனிப்பட்ட கிராமம். அவ்வூரில் வசித்தான் நாவிதன் ஆறுமுகம். ஆறுமுகத்திற்குத் தன தூரிலே வருவாய்குறைவு. வெளிப்பட்டான் அடுத்தவூருக்கு. அவ்வூர் காட்டுமார்க்கமாய்ச் சென்றுகொண்டிருந்தான். நாவிதர்கள் நல்ல புத்திசாலித்தனமுள்ளவர்களென்பது எல்லோரும் அறிந்த தொன்றல்லவா? ஆறுமுகம் நல்ல புத்திசாலி; சமயோசிதமாக நடந்து கொள்ளக்கூடிய கெட்டிக்காரன்.

காட்டுமார்க்கமாகச் சென்று கொண்டிருக்கையில், அவன் முன்ப சிங்கமொன்று தோன்றியது. அதைக் கண்டதும் அவனுக்குப் பயமுண்டாயது. சிங்கத்தைக் கண்டால் எப்படிப்பட்டவர்களும் பயமுறுவதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆறுமுகம் ஓர் துணிந்தகட்டை. அவன் சற்றும் நின்று யோசனைபுரியவில்லை. சிங்கத்தை நோக்கி, ஏ சிங்கமே! நான் யார் தெரியுமா? யான் ஓர் மந்திரவாதி. யான் சிங்கங்களை யெல்லாம் பிடித்து இதோ இந்தச்சிறிய பைக்குள் (கருவிப்பை) அடைத்துவிடுவேன். கொஞ்சநேரத்திற்கு முன்பு ஒரு சிங்கம் அகப்பட்டது. அதை இதற்குள்ளே அடைத்து வைத்திருக்கிறேன் என்றான். இவற்றைக்கேட்ட மிருகேந்திரனுக்கு உண்மையாகவே நடுக்கமும், பயமும் உண்டாயிற்று. இது அவனை நோக்கி. நீ கூறுவது உண்மையானால் அந்தச் சிங்கத்தைக் காட்டு பார்ப்போம் என்றது. உடனே அவன் பைக்குள் கையை விட்டுக் கண்ணாடியை எடுத்துச் சிங்கத்தின் முன்பாகக் காட்டினான். தனது சாயலைக் கண்டான் மிருகேந்திரன். அந்தக்கண்ணாடிக்குள்ளால் அதைக்கண்டதும் உண்மையான ஓர் சிங்கம் நிற்கிறதென நம்பிவிட்டது அச்சிங்கம். மிகவும் பயத்துடன் விழிப்புற்றது.

ஆறுமுகம் மிருகராசனைப் பார்த்து நீ எனக்கு ஏராளமான பணம் கொடுக்கவேண்டும். அஃதின்றேல் இப்பொழுதே பைக்குள் அடைத்துவிடுவேனென்று அதட்டினான். சிங்கம் ஓடித் தப்பிவிடலாமாவென்று எண்ணியது. ஆறுமுகம் விடமாட்டான் போற்றோன்றியது. ஆனபடியால் சிங்கம் ஆறுமுகத்தைப் பார்த்து. என்னைப் பைக்குள் அடைககாதே. நீ என்ன சொல்லினும் செய்கிறேன் என்றது.

அப்படியானால், கொஞ்சக் காலத்திற்கு எனக்கு நீ வாகனமாக இருக்கவேண்டுமென்று அவன் அதன் முதுகின் மேல் ஏறிக்கொண்டான். நேரே அவ்வூர் அரசனிடம் சென்றான். அரசனும், அமைச்சரும், ஏனையோரும் நடுக்கமுற்றனர். ஆறுமுகம் நான் ஓர் மந்திரவாதி; சிங்கங்களையெல்லாம் பிடித்து இட்டவேலைகளைச் செய்யும்படி செய்யும் சக்தி எனக்குண்டு; இப்பொழுது ஏராளமான தனமளிக்காவிடின், இச்சிங்கத்தை ஏவிவிட்டு அனைவரையும் மறலியிடம் ஒப்புவிப்பேன் என்று கூறிக் கர்ஜ்ஜிக்கும்படியாகச் சிங்கத்துக்கு ஆக்ஞாபித்தான். அயலோரும் அதிசயிக்கும்படி அது பயங்கரமாகக் கர்ஜ்ஜித்தது. அரசனும், அமைச்சர்களும் பயமுற்று, மயிர்க்கூச்செறிந்து ஆறுமுகம் கேட்ட அவ்வளவு பொருளையும் வாரி வளங்கினர்கள். ஆறுமுகம் தனதூர் சேர்ந்ததும், நேரே காட்டிற்குச் செல்லும்படி விரட்டிவிட்டான் சிங்கத்தை.

பிள்ளைகளே! மாணவர்களே!! உங்களையாராவது ஏமாற்ற நினைக்குஞ் சமயத்தில் சமயோசித புத்தியைப் பிரயோகத்துத் தப்பித்துக்கொள்ளக் கடவீர்கள்.

"புத்திமான், பலவானல்லவா?"

விண்ணப்பப் பத்திரம்

திகதி.......................................

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்" தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறுமாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [இந்தியா 2 அணு; மலாயா 16 காசு.]

பெயர்...

பிறந்த திகதி..............................மாதம்...............................வருடம்...............................

விலாசம்..

....

பெற்றோர், அல்லது உபாத்தியாயர் கையொப்பம் ....

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

[குறிப்பு : இளைஞர்சங்கத்தில் சேர விரும்புவோர் தமது விண்ணப்பப் பத்திரத்தை அச்சுக் கூபனிலேயே நிரப்பியனுப்பவேண்டும். வெறுங் காகிதத்தில், எழுதப்படுவன கவனிக்கப்படா. சந்தா புதுப்பிப்பவர்களுக்கு இந்த நிபந்தனை கிடையாது]

சன்னல்பின்ன லான சகலமெனுங் குப்பையிடை, முன்னவன்ஞா னக்கனலை மூட்டுநாள் எந்நாளோ.

ஈழகேசரி இளைஞர் சங்கம்

அன்புமிக்க குழந்தைகாள் !

தாத்தாவுக்குத் தடிமல் என்று கேள்விப்பட்டதே எத்தனையெத்தனை கடிதங்களெல்லாம் க்ஷேமம் விசாரித்து எழுதிவந்தன ! அவர்களின் அன்பே அன்பு. இப்பொழுது தாத்தா நல்ல சௌக்கிய மடைந்துவிட்டார்.

பல நாட்களாக நான் உங்களையெல்லாம் ஒருவருக்கொருவர் நட்புரிமை பூண்டு, ஊருக்கூர் கடிதமெழுதி எல்லா அங்கத்தவர்களும் கூட்டுறவாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்தி வந்தேனல்லவா? இந்த வார்த்தைகளை எத்தனை அங்கத்தவர் தங்கள் புத்தியில் வைத்துக்கொண்டனர்? சிலர் தங்களுக்கு இரண்டொரு நண்பர்கள் தேவையெனக் கேட்டார்கள். நானும் விலாசங்கொடுத்தேன். ஆனால் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டார்களோ என்றால் அதுதான் கிடையாது ! மகாநாட்டிலன்று ஒன்றுகூடிய அங்கத்தவர்கள்தானும் நட்புக் கொண்டிருக்கிறார்களென்பதும் சந்தேகந்தான்.

குழந்தைகளே, பிறவூர்களில் நண்பர்களை வைத்துக்கொள்வதிலிருக்கும் பலனை நீங்கள் அறியமாட்டீர்கள். கேளுங்கள், எனக்குப் பல காலமாகவே இந்தியா, இங்கிலாந்து, நோர்வே, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான் ஆகிய தேசங்களில் பல நண்பர்களிருக்கிறார்கள். இவர்களில் பலரை நான் கண்ணால் பார்த்தறியமாட்டேன். போட்டோ மாத்திரம் வைத்திருக்கிறேன். ஆனால் நாங்கள் பெரிய சிநேகிதர்கள். அடிக்கடி கடிதமெழுதி, ஊர் விசேஷங்களையும் உலகப் புதினங்களையும் அறிந்துகொள்வோம். சில வேளைகளில் எனக்கு அந்தவூர்களிலிருந்து நூதனமான பொருள்கள்கூட வந்துசேரும்.

நான் இந்தியாவுக்குப் போகும்போதெல்லாம் அங்குள்ள நண்பர்களுடன் தங்குவேன். அவர்கள் மிகவும் அன்பாக உபசரிப்பார்கள். முன் போயிராத ஊர்களுக்கு அவர்கள் அழைத்துக்கொண்டுபோய்க் காட்டுவார்கள்.

இப்படி இந்த நட்புரிமையில் அநேகம் நன்மைகளிருக்கின்றன. உதாரணமாக வடமராட்சியிலுள்ள ஒருவர் தீவுப்பகுதிகளில் ஒரு நண்பரை வைத்துக்கொண்டால் அந்தவூர்களைப் பார்க்கலாம். விசேஷங்களையறியலாமல்லவா ?

ஆகையால் குழந்தைகளே, எங்கள் சங்கத்தின் முக்கிய நோக்கம் கூட்டுறவு. இதற்கு நீங்கள் ஒத்துழைக்கவேண்டும். ஒருவருடன் ஒருவர் கடிதமூலம் கூடிப் பழகவேண்டும் இதற்கு நீங்கள் இன்ன நண்பர்தான் வேண்டும் என்று பெயரையும் ச. எண்ணையும் குறிப்பிட்டு எனக்கெழுதினால் நான் விலாசம் தருவேன்.

இன்று 18-ந் திகதி. அடுத்தமாதம் 18-ந் திகதிக்கு முன் (18-7-39) எத்தனைபேர் அப்படி நட்புக்கொண்டு வருவீர்கள் பார்ப்போம். நண்பர்கள் ஒருவரையொருவர் காணாமலிருக்கவேண்டும். கடிதமூலம் பேசிக்கொள்ள வேண்டும். இப்படி நட்புக் கொண்டவர்களுக்கிடையில் கிடைத்த திறமான கடிதம் எழுதியவருக்கு நான் ஒரு பரிசு கொடுக்க எண்ணியிருக்கிறேன். ஞாபகமிருக்கட்டும். அடுத்த 18-739-க்கிடையில் புதிதாக நண்பர்களைப் பிடித்துக்கொள்ளுங்கள். விலாசம் தேவையானால் உடனே எழுதவேண்டும். இரண்டு பரிசுகள் உண்டு. ஒன்று பெண்களுக்கு. மற்றது ஆண்களுக்கு. ஒரு நிபந்தனைமாத்திரம் : ஆண்பிள்ளைகள் ஆண்பிள்ளைகளுக்கு மாத்திரமும், பெண்பிள்ளைகள் பெண்பிள்ளைகளுக்குமாத்திரமும் கடிதமெழுதலாம்.

பின்னர், நான் குறிப்பிடும் தேதிக்குமுன் அங்கத்தவர்கள் தங்கள் 'கண் காணா' நண்பர்களிடமிருந்து கிடைத்த கடிதங்களில் மிகவும் அழகான கடிதத்தைத் தாத்தாவுக்கு அனுப்பினால், எழுதியவருக்கும் அதைப் பெற்றவருக்கும் சன்மானங்கள் வழங்கப்படும். எங்கே பார்க்கலாம் !

* * *

கோப்பாய் வடக்கு சரவணபவானந்த வித்தியாசாலையிலிருந்து பேரன் இராமச்சந்திர ஐயர் 7 அங்கத்தவர்களைச் சேர்த்து, ஒரேயடியாக 7 விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பியிருக்கிறார். இவர்போல் முயற்சியுள்ள அங்கத்தவர் எத்தனைபேர் ?

—தாத்தா

தாத்தா பதில்

சி. அரசரத்தினம் (180) உமது சித்திரமுகப்பு விஷயம் ஒரு சித்திரகாரர் மூலம் கவனிக்கப்படுகிறது. அங்கத்தவர்கள் அனுப்பியவை சரியாயில்லை. "பாவம்" இந்தவாரம் வெளிவருகிறது. இது யார் செய்த பாவமோ! அம்மாவின் சுகவீனத்தைப் பற்றி மிகுந்த அனுதாபம். எனக்கிப்போது சுகம். இவ்வாரம் எனது கடிதத்தைப் படிக்கவும்.

சர்மா (261) உமது விஷயம் அடுத்தவாரம் வெளிவர இருக்கிறது.

சீ. நடராசா (259) உமது கட்டுரையும் அடுத்த வாரம்.

மு. க. சின்னத்துரை (263) உமது கட்டுரையும் அடுத்த வாரம்.

சு. இராமச்சந்திர ஐயர் அன்பே உமது ஆர்வத்தை நான் மெச்சுகின்றேன். எல்லா அங்கத்தவர்களும் உமது முன்மாதிரியைப் பின்பற்றுவார்களென்று நம்புகிறேன். உபாத்தியாயருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளவும். உங்கள் 7 பேருக்கும் 7 கல்வி அனுபந்தம் இனாமாக இந்த வாரம் அனுப்புகிறேன். பெற்றுக்கொண்டு ஊக்கமாக உழைக்கவும்.

புதிய அங்கத்தவர் (முற்றொடர்)

267.	வேலுப்பிள்ளை கந்தசாமி	272.	செ. சந்திரசேகரி
268.	தம்பு தங்கராசா	273.	பொ. கனகையா
269.	S. தியாகராசா	274.	க. சச்சிதானந்தம்
270.	சு. இராமச்சந்திர ஐயர்	275.	சி. செல்லையா
271.	ஆ. சுப்பிரமணியம்	276.	ம. செல்லையா

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள் நிலைய"த்தி லிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டிய'லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஞு ஜூன்மீ 18உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.